# தசைச்சிதைவு நோய் குறித்து விழிப்புணர்வு இல்லையே!

## கோவையில் டாக்டர் பி.ஆர்.லட்சுமி வேதனை

கோவை, ஜூலை.12-

கோவை நவ இந்தியா அருகே உள்ள் குறிஞ்சிமருத்துவமனையில் மரபணு பரிசோதனை, கலந்தாய்வு, பராமரிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் செயல்பட்டு வந்தது. தற்போது இந்த நிறுவனத்தை கோவை நீலம்பூரில் உள்ள ராயல் கேர் உயர் சிறப்புமருத்துவமனைக்கு இடம் மாற்றம் செய்து உள்ளனர். இதன் தொடக்க விழா ராயல் கேர் மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்றது. விழாவிற்கு டாக்டர் ஹிமாங்ஷூதாஸ் தலைமை வகித்தார். கூகுள் ஹெல்த் தலைவர் டாக்டர் துஷ்யந்த் சின்ஹ்ஜடேஜா, டாக்டர் ரிதேஷ் நாராயண்பூர் (ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா), கோவை ஆரிய வைத்ய பார்மசி நிர்வாக இயக்குனர் பத்மஸ்ரீ டாக்டர் கிருஷ்ணகுமார், கவுரவ விருந்தினராக ராயல்கேர் மருத்துவமனை தலைவர் டாக்டர் மாதேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் தன்னார்வ தொண்டு நிறுவனர் டாக்டர் பி.ஆர்.லட்சுமி தசைச்சிதைவு நோய்க்கான சேவை குறித்து பேசியதாவது:

தமிழகத்தில் உள்ள கிராமபுற மக்களிடையே ஆண் குழந்தைகளை தாக்கும்தசைச் சிதைவு நோய் பற்றி போதிய விழிப்புணர்வு ஏற்பட வில்லை. இதனால் மாநில அளவில் 20 மாவட்டங்களில் எங்கள் அமைப்பு மூலம் வீட்டுக்கு வீடு சென்று புள்ளி விவரம் சேகரித்து வருகிறோம். உலகம் முழுவதும் இந்த நோய் தாக்கி உள்ளதாக தெரிய வருகிறது. இது 3500 குழந்தைகளில் ஒரு ஆண்குழந்தைக்கு உள்ளதாக புள்ளி விவரம் கூறுகிறது. தமிழகத்தில் இந்த நோய் கரூர் நாமக்கல் மாவட்டங்களில் அதிகம் இருப்பதாக கூறுகிறார்கள்.

ஆண் குழந்தைகளை மட்டுமே தாக்கும் இந்த நோய் பற்றி இன்னும் விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். எங்கள் அமைப்பு 2006-ம் ஆண்டு முதல் இந்நோய் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம். குழந்தை பருவத்தில் இந்த நோய் குறித்து பெற்றோர் யாருக்கும் தெரிவதில்லை. இதனால் மிகவும் அஜாக்கிரதையாக இருந்து விடுகிறார்கள்.

இந்தியாவில் சமூக தணிக்கை குறைவாக உள்ளதால் இந்நோய் பற்றிய போதிய விழிப்புணர்வு இன்னும் அதிகம் ஏற்பட வில்லை. மேலும் இந்நோய்க்கு இன்னும் மருந்து கண்டு பிடிக்கப்படவில்லை என்பது வேதனையான விஷயம்.

இவ்வாறு அவர் கூறினார்.

இதனை தொடர்ந்து தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் "நெஞ்சுக்கு நீதி" என்ற பாரதியார் பாடலை உற்சாகத்துடன் பாடி அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்.

இது தொடர்பாக மேலும் விவரம் அறிய ராயல் கேர் மருத்துவ மனையை அணுகலாம். அல்லது 9489053702, 9489053705 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம் என்றும் டாக்டர் லட்சுமி தெரிவித்தார்.

நமது முரசு (12-07-2019)